நம்பர் 1 தமிழ் நாளிதழ்
சன் குழுமத்திலிருந்து வெளிவரும்
தமிழகத்தின் No:1 காலை நாளிதழ்
SUN GROUP



# மருத்துவ பணி 10 டாக்டர்களுக்கு சாதனையாளர் விருது

பதிவு செய்த நாள் 7/2/2011 1:33:46



சென்னை : மருத்துவத் துறையில் சிறப்பாக பணியாற்றிய டாக்டர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. டாக்டர்கள் தினத்தை முன்னிட்டு, சென்னை மருத்துவ கல்லூரி(எம்எம்சி) சார்பில் மருத்துவ துறையில் சிறப்பாக பணியாற்றிய டாக்டர்களுக்கு விருது வழங்கும் விழா நேற்று நடந்தது. கல்லூரி டீன் டாக்டர் கனகசபை தலைமை தாங்கினார். துணை முதல்வர் டாக்டர் சுந்தரம், மருத்துவமனை கண்காணிப்பாளர் டாக்டர் பழனி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில், சிறப்பாக பணியாற்றியதாக டாக்டர்கள் பழனியப்பன், சாராதாம்பாள், எம்.எஸ்.ராமச்சந்திரன், வேம்பார், கே.லட்சுமணன், ஆர்.வீரபாகு, என்.சண்முகசுந்தரம், ராஜா, நாராயணன், பிரேம்குமார் ஆகிய 10 டாக்டர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. மருத்துவப் பல்கலை: தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் சார்பில் பல்கலைக்கழக நாள் மற்றும் மருத்துவர் தின விழா நேற்று நடந்தது.

துணை வேந்தர் மயில்வாகனன் நடராஜன் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக சங்கர நேத்ராலயா தலைவர் எஸ்.எஸ்.பத்ரிநாத், கவுரவ விருந்தினராக குழந்தைகள் நல மருத்துவ ஆராய்ச்சி மையத்தின் தலைவர் மாதங்கி ராமகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். சிறப்பாக பணியாற்றிய டாக்டர்கள் அலமேலு வெங்கட்ராமன், துரைராஜன், கணேசன் உட்பட 24 பேருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.